1978 மார்ச் 27]

அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே இல்லை. ஆனுலும், பூச்சிகளைக் கொல்வதற்குண்டான வீரிய மருந்துகள் தமிழகத்தி லேயே கிடைக்கின்றன. அந்த மருந்துகளின் மூலமாகப் பூச்சி களைக் கொல்ல முடியும். மேலும் "வெட் கிரவுண்ட் மெக்கோ" என்று அமெரிக்காவிலே ஏதோ கண்டுபிடித்ததாக, முத்துசாமி கரையாளர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அப்படிப்பட்ட திட்டம் இந்த அரசுக்கு இதுவரையிலும் வரவில்லை. அந்தத் திட்டத்தைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி இந்த அரசுக்கு எடுத்துக் கூறுவார்களானல், உடனடியாக நடவடிக்கை எடுப்போம்.

திரு. சு. முத்துசாமி கரையாளர்: அப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்று எனக்குத் தெரிய வந்தது. அதனல், அதை நான் கேள்வி மூலம் தெரியப்படுத்தினேன். அதுபற்றிய திட்டத்தை நாளை நான் நேரில் கொண்டு வந்து தருகிறேன்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

* 681 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியை கோவையில் உள்ள விவசாய பல்கலைக் கழகத்துடன் சேர்த்துள்ள காரணம் என்ன?

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பாக இருந்ததைப் போலவே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

நெல் விதைகள் வழங்கல்.

* 682 வினு—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் 1 ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் உள்ள விவசாயிகளுக்கு முதல் ரக நெல் விதைகள் கொடுக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

* 183-184-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.